FOUNDERS' MEMORIAL

தயாரிப்பு

31 அக்டோபர் 2025 -
29 மார்ச் 2026

நகர மண்டப அரங்கு, சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடம்




# சிங்கப்பூரின் பல்லின பண்பாட்டு உருவாக்கங்கள்

## பார்வையாளர் மட்டுமல்ல

சிங்கப்பூரின் 1950கள்-1970கள் காலகட்டத்தில் அடியெடுத்து வையுங்கள். அப்போது பல்லின பண்பாடு குறித்து சிந்திக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டது. கொள்கைகள், களப்பணி முயற்சிகள், சாதாரண குடிமக்களின் அன்றாட வாய்ப்புகள் போன்றவற்றின் மூலம் அது உணர்வுபூர்வமாக உருவாக்கப்பட்டது.

## மலாயா மற்றும் "மலாயா நாட்டுணர்வு"

இந்த கண்காட்சியில் **"மலாயா" மற்றும் "மலாயா நாட்டுணர்வு"** என்ற செற்களை எதிர்பார்ப்பீர்கள்.

- **"மலாயா" என்பது** 1950கள் மற்றும் 1960களின் முற்பகுதியில் உருவான மலாயா கூட்டரசை குறிக்கிறது. அது, தீபகற்ப மலாயாவின் ஒன்பது மாநிலங்களையும் பினாங்கு, மலாக்கா நீரிணைக் குடியேற்றங்களையும் உள்ளடக்கியிருந்தது.
- **"மலாயா நாட்டுணர்வு" என்பது** இன அடையாளங்களைத் தாண்டி மலாயா என்ற தேச உணர்வைக் குறிக்கிறது. எஸ். ராஜரத்தினம் போன்ற சிந்தனைமிகுந்த தலைவர்கள் மலாயா நாட்டுணர்வு என்ற யோசனையை முன்னெடுத்துச் சென்றனர். அந்த உணர்வு, சுயாட்சி சிங்கப்பூரை சுதந்திர மலாயாவுடன் இணைவதற்கு வழி வகுத்தது.

### கால வரிசை

| | |
|---|---|
| 1948 | மலாயா கூட்டரசு உருவானது |
| 1957 | மலாயா சுதந்திரம் பெற்றது |
| 1959 | சிங்கப்பூர் முழுமையாக உள்நாட்டு சுயாட்சி தகுதியைப் பெற்றது |
| 1963 | மலாயா, சிங்கப்பூர், வட போர்னியோ (சாபா), சரவாக் ஆகியவை இணைந்து மலேசியா உருவானது |
| 1965 | சிங்கப்பூர், மலேசியாவிலிருந்து பிரிந்து சுதந்திரம் பெற்ற தனி நாடானது |

## நுழைவாயிலில் இவற்றை எடுத்துக் கொள்ளுங்கள்...



**மொழிபெயர்க்கப்பட்ட புத்தகங்கள்**
(இரவல் பெறுவதற்குக் கிடைக்கும்)



**கல்வி வளங்கள் மற்றும் குடும்ப வழிகாட்டி**

## இந்தக் கண்காட்சி முழுவதும் இடம்பெற்றுள்ள இந்த சின்னங்களை/ QR குறியீடுகளைக் கவனிக்கவும்...

**உரையாடுவதற்கான கேள்விகள்**
இந்தக் கேள்விகளைச் சிந்தித்துப் பாருங்கள், மற்றவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

**ஒலி வழிகாட்டி**
(2025 டிசம்பர் முதல் கிடைக்கும்)
இந்த பகுதி குறித்து காப்பாளர் தரும் விளக்கத்தைக் கேட்க QR குறியீட்டை வருடுங்கள்.

***+65* ஆய்விதழ்**
எங்களுடைய ஆய்விதழில் இந்தத் தலைப்பு பற்றி வாசித்து மேலும் தெரிந்துகொள்ள QR குறியீட்டை வருடுங்கள். வெளியேறும் இடத்தில் வரையறுக்கப்பட்ட அச்சுப் பிரதிகள் கிடைக்கின்றன.

## நீங்கள் வெளியேறுவதற்கு முன்பு உங்கள் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்...

உங்கள் எண்ணங்களை செயல்பாட்டு அட்டைகளில் எழுதி பிரதிபலிப்பு சுவரில் ஒட்டுங்கள். அப்படிச் செய்துவிட்டு ஓர் ஒட்டுவில் தாளை வீட்டுக்கு எடுத்துச் செல்லுங்கள்.




## கண்காட்சி சிறப்பம்சங்கள்




1. அறிமுகம் மற்றும் முன்னுரை
2. ஒன்றுகூடு
3. கற்பனை செய்
4. இணை
5. தொடர்புபடுத்து
6. வாழ்
7. நகர்தல்
8. குடிமக்கள் திட்டப்பணி


## 2. ஒன்றுகூடு



**அனேகா ராகம் ராயாட் – ஓர் அசைவூட்டு படம்**
2025
இயக்குநர், மார்க் வீ
ஃபைண்டிங் பிக்சர்ஸ் நிறுவனத்தின் தயாரிப்பு
நிறுவியோர் நினைவகத்தால் உருவாக்கப்பட்டது
கால அளவு: 2:40 நிமிடம்

**கேளிக்கை தகவல்:**
முன்னாள் நகர மண்டபம் (இப்போது சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடம்) பல அனேகா ராகம் ராயத் இசை நிகழ்ச்சிகளுக்கு பின்னணியாக இருந்தது!

## 3. கற்பனை செய்



**இருவழித்தொடர்பு மின்னிலக்க ஊடகம்:**
**ஒரு தேசம் உருவாகின்றது என்ற எஸ். ராஜரத்தினத்தின் வானொலி நாடகத்தின் அசல் தட்டச்சுப் படிவங்கள்**
1957
எஸ். ராஜரத்தினத்தின் தனிப்பட்ட படிவங்களின் தொகுப்பு, "பல குரல்களுக்கான ஒரு கலந்துரையாடல், எஸ். ராஜரத்தினம்" SR.091
ISEAS நூலகம், ISEAS உதவியுடன் – யுசோஃப் இஷாக் கழகம், சிங்கப்பூர்

எடுத்துக்காட்டு நோக்கத்திற்கு மட்டுமே




**மூன்று பகுதிகளைக் கொண்ட ஒலிப்பதிவு: ஒரு நாடாக உருவாகுதல்:**

- மொழி: செவிசாயுங்கள் 4 இணை
- இனம்: உருவாக்கத்தில் 5 தொடர்புபடுத்து
- தேசிய உணர்வுகள்: கனவுகளுக்கான ஓரிடம் 6 வாழ்

2025
செய்லீன் டான்
நிறுவியோர் நினைவகத்தால் உருவாக்கப்பட்டது
நேரம்: ஒவ்வொரு பகுதியும் ஏறக்குறைய 2.30 நிமிடங்கள்

## 4. இணை

எடுத்துக்காட்டு நோக்கத்திற்கு மட்டுமே



**1950கள் முதல் 80கள் வரை கற்றல் வளங்களின் பிரதிகள்**



**வாழை இலையில் சாப்பிடுவது**
1979
சுவா மியா டீ
டைம்ஸ் பப்ளிஷிங் லிமிடெட்டின் அன்பளிப்பு
சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடத்தின் தொகுப்பு


**பொது அடையாளத்திற்கு நாம் ஒரே மொழியைப் பேச வேண்டுமா?**

## 5. தொடர்புபடுத்து

எடுத்துக்காட்டு நோக்கத்திற்கு மட்டுமே



**இருவழித்தொடர்பு மின்னிலக்க கதைப்புத்தகம்: தொஷிகொ காதிர் உள்ளடங்கிய இனக்கலப்பு கதைகள்**
1964–1970கள்
தொஷிகொ காதிரின் உதவியுடன்



**ஒரு ரயிலில் காதலர்கள்**
2021
இயோ சீ யாங்
திரு நிக் லிம்மிடமிருந்து இரவலாகப் பெறப்பட்டது

**இனம் பற்றி நாம் கவலைப்படாமல் இருக்கிறோமா, அப்படி இருக்க முடியுமா?**

## 6. வாழ்

எடுத்துக்காட்டு நோக்கத்திற்கு மட்டுமே



**இருவழித்தொடர்பு மின்னிலக்க புகைப்பட வாய்ப்பு: ஒரு பொது இடத்தைத் தேர்வு செய்து ஒரு புகைப்படம் எடுங்கள்**



***சிங்கப்பூர் முன்மாதிரிகள் – ஆன்டிகள் & அங்கிள்கள்)***
2009
ஜிங் குவெக்
சிங்கப்பூர் கலை அரும்பொருளகத்திடம் இரவலாகப் பெறப்பட்டது.

நாம் ஒரு வெற்று தளத்தையோ அல்லது வகுப்பறையையோ பகிர்ந்துகொள்ளலாம், ஆனால் வெறுமனே ஒன்றாக இருக்கலாம். நாம் ஒவ்வொரு நாளும் ஒருவரையொருவர் சந்திக்கலாம் ஆனால் நமது சமூக ஊடக குமிழிகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களாகவே இருக்கலாம். நாம் எவ்வாறு ஆழமாகவும் உண்மையாகவும் இணைய முடியும்?

## 7. நகர்தல்

எடுத்துக்காட்டு நோக்கத்திற்கு மட்டுமே



**இருவழித்தொடர்பு மின்னிலக்க நடனம்: மேடை ஏறுங்கள் - வெறும் பார்வையாளராக இருக்காதீர்கள்!**

**பல்லினபண்பாடு என்பது ஒரு பயணம். இதை எப்படி நீங்கள் முன்னெடுத்துச் செல்வீர்கள்?**

## 8. குடிமக்கள் திட்டப்பணி

எடுத்துக்காட்டு நோக்கத்திற்கு மட்டுமே



**முதல் தலைமுறையைச் சேர்ந்த எட்டு பேர் பன்முக கலாச்சார சிங்கப்பூரின் குடியுரிமையைப் பெற்ற தங்களின் கதைகளைப் பகிர்ந்து கொள்கின்றனர்.**

நேர்காணல்களைப் பார்க்க QR குறியீட்டை கிளிக் செய்யவும்

## நிகழ்ச்சிகள்

அனைத்து நிகழ்ச்சிகளும் தெரிவிக்கப்பட்டாலொழிய ஆங்கிலத்தில் மட்டுமே நடத்தப்படும்.

### சுற்றுப் பயணம்

**வழிகாட்டி உதவியுடன் சுற்றுப் பயணம்**

**பேருந்து சுற்றுப் பயணம்** (முன்பதிவு மூலம்)
தீவு முழுவதும் பேருந்து ஏறி, இறங்கும் இடங்களுடன் வழிகாட்டும் சுற்றுப் பயணம்.

- பதிவு செய்வதற்கு நிறுவியோர் நினைவகத்தின் இணையதளத்தைப் பார்க்கவும்.

**காப்பாளர் சுற்றுப் பயணம்** (முன்பதிவு மூலம்)
காப்பாளரின் பார்வையிலிருந்து கண்காட்சியை கண்டறியுங்கள்.

- 15 நவம்பர் (சனிக்கிழமை) மற்றும் 17 ஜனவரி (சனிக்கிழமை), மாலை 4.30
- பதிவு செய்வதற்கு நிறுவியோர் நினைவகத்தின் இணையதளத்தைப் பார்க்கவும்.

**குடும்ப சுற்றுப் பயணம்** (முன்பதிவு மூலம்)
4 முதல் 9 வயது வரையிலான சிறுவர்களுடன் கூடிய குடும்பங்களுக்காக வடிவமைக்கப்பட்ட சிறப்பு சுற்றுப் பயணம். கதைகள், இருவழி உரையாடல் நடவடிக்கைகள் மூலம் சிங்கப்பூர் பயணித்த பன்முகக் கலாசாரத்தைத் தெரிந்து கொள்ளுங்கள்.

- 6 டிசம்பர் (சனிக்கிழமை), மற்றும் 14 மார்ச் (சனிக்கிழமை) காலை 10.30
- பதிவு செய்வதற்கு நிறுவியோர் நினைவகத்தின் இணையதளத்தைப் பார்க்கவும்.

### சிறப்பு நிகழ்ச்சிகள்

**#NoStrangerDanger**
கண்காட்சி நடக்கும் இடத்தில் ஒரு மணிக்கட்டு பட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். மணிக்கட்டுப் பட்டை அணிந்த மற்றவர்களுடன் உரையாடுங்கள். சிங்கப்பூரில் உள்ள பன்முகக் கலாசாரம் பற்றிய கருத்துகளையும் கதைகளையும் பரிமாறிக் கொள்ளுங்கள்.

- குறிப்பிட்ட காலகட்டத்தில் மட்டுமே கிடைக்கும். விவரங்களுக்கு நிறுவியோர் நினைவகத்தின் இணையதளத்தைப் பார்வையிடுங்கள்.

**அநேக ராகம் ரீமிக்ஸ்** (புதிய பாணி)
1959 முதல் 1960களின் நடுப்பகுதி வரை நடைபெற்ற பொதுமக்கள் கதம்ப நிகழ்ச்சியான அநேக ராகம் ராக்யாட்டின் புதிய பாணி பல இனக் கலாசாரங்கள் கலந்த ஆடல், பாடல்களில் பங்கேறுங்கள்.

- 7 டிசம்பர் (ஞாயிறு), 14 பிப்ரவரி (சனி) மற்றும் 14 மார்ச் (சனி). சரியான நேரங்களுக்கு நிறுவியோர் நினைவகத்தின் இணையதளத்தைப் பார்க்கவும்.
- இடம்: சிங்கப்பூர் கோர்ட்யார்ட், 3வது மாடி சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடம்

**குழு கலந்துரையாடல்கள்** (முன்பதிவு மூலம்)
சிங்கப்பூரில் பன்முகக் கலாச்சாரம் குறித்த கண்ணோட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் கலைஞர்கள் மற்றும் கல்வியாளர்களுடன் சிந்தனையைத் தூண்டும் உரையாடலில் ஈடுபடுங்கள்.

- 23 நவம்பர் (ஞாயிற்றுக்கிழமை) மற்றும் 7 மார்ச் (சனிக்கிழமை). எந்த நேரத்தில் நடைபெறும் என்பதை நிறுவியோர் நினைவகத்தின் இணையதளத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்.
- இடம்: நீ ஆன் கொங்சி ஆடிடோரியம், சிங்கப்பூர்த் தேசியக் கலைக்கூடம்

**அறியாத மறுபக்கம்** (முன்பதிவு மூலம்)
கண்காட்சியின் உள்ளடக்கம் பற்றி வெளிப்படையான, உண்மையான கலந்துரையாடல்கள் மூலம் ஆழமான தொடர்பையும் பகிரப்படும் புரிதலையும் ஏற்படுத்துங்கள். இந்தப் பதிப்பு உள்ளூர்க்காரர்களையும் வெளிநாட்டவர்களையும் ஒன்றிணைக்கிறது!

- வெள்ளிக்கிழமை மாலை வேளைகளில்:
  21 நவம்பர், 19 டிசம்பர் 2025,
  6 பிப்ரவரி, 27 பிப்ரவரி மற்றும் 13 மார்ச் 2026,
  மாலை 7.30 மணி - 9.30 மணி
- பதிவு செய்வதற்கு நிறுவியோர் நினைவகத்தின் இணையதளத்தைப் பார்க்கவும்.

## எங்களுடன் இணைந்திடுங்கள்!

***+65* ஆய்விதழ்**
கண்காட்சியில் குறிப்பிட்ட எண்ணிக்கையில் மட்டுமே பிரதிகள் கிடைக்கும் அல்லது வாசிப்பதற்கு QR குறியீட்டை வருடுங்கள்:

இந்த *+65* நான்காவது இதழ், பன்முகக் கலாசாரத்தின் தலைப்பை ஆராய்கிறது. சுதந்திர, சுதந்திரத்திற்குப் பிந்திய (1950கள்-1970கள்) காலகட்டத்தில் சிங்கப்பூரின் பன்முகக் கலாசாரம் தோன்றி, உருமாறி வந்துள்ளதைப் பற்றி விரிவான தகவல்களைப் பெறுங்கள்.

***+65* பற்றி**
நிறுவியோர் நினைவகத்தின் முதன்மையான வெளியீடு *+65*. இது, சுதந்திர சிங்கப்பூர், சுதந்திரத்திற்குப் பிந்திய வரலாறு, சமூகம் குறித்து சிந்திக்கும் தலைமைத்துவம் உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டது. நமது நாடு வளர்ந்துவந்த ஆரம்பக்கால ஆண்டுகளில் எவ்வாறு விளக்கப்பட்டன, பிரதிநிதிக்கப்பட்டன, நினைவில் கொள்ளப்பட்டன என்பதன் பல்வேறு அம்சங்களை ஆராயுங்கள்.

**நிறுவியோர் நினைவகம் அஞ்சல் பட்டியல்**
நிறுவியோர் நினைவகம் உருவாக்கத்தில் பங்கேற்க விரும்புகிறீர்களா?

ஒரு தொண்டூழியராக பதிந்துகொள்ள QR குறியீட்டை வருடுங்கள்

எங்களுடைய அஞ்சல் பட்டியலில் இணைந்துகொள்ள QR குறியீட்டை வருடுங்கள்

www.foundersmemorial.gov.sg
Founders' Memorial Singapore
foundersmemorialsg
Founders_Memorial@nhb.gov.sg

## நிறுவியோர் நினைவகத்திற்கு புதியவரா?

நிறுவியோர் நினைவகம், சுதந்திர சிங்கப்பூரின் அடிப்படை விழுமியங்களையும் நாட்டு நிர்மாணப் பயணத்தையும் போற்றிக் கௌரவிக்கிறது. பூந்தோட்டத்துடன் ஒருங்கிணைக்கப்பட்ட காட்சிக்கூடமாக 2028-இன் இறுதியில் கிழக்குக்கரைப் திறக்கப்படவிருக்கும் இந்த நினைவகம், நமது முதல் தலைமுறைத் தலைவர்களும் மக்களும் பல இனக் கலாசாரம், திறந்த மனப்பான்மை, நேர்மை போன்ற விழுமியங்கள், இலட்சியங்களின் அடிப்படையில் சுதந்திர சிங்கப்பூரை எவ்வாறு நிர்மாணித்தனர் என்னும் கதையைப் படைக்கிறது. இந்த நினைவகம் நம் அடிப்படை விழுமியங்களைப் பற்றிச் சிந்தித்து சிங்கப்பூரின் எதிர்காலம் குறித்து ஊக்கம் பெற சிங்கப்பூரர்களைத் தூண்டுகிறது.

பார்வையாளர் மட்டும் அல்ல என்பது நினைவகத்தின் இரண்டாவது முன்னோடிக் கண்காட்சியாகும். இது, பன்முகக் கலாசாரம் என்ற மதிப்புமிக்க விழுமியம் நிறுவப்பட்டதில் கவனம் செலுத்துகிறது.

தயாரிப்பு
FOUNDERS' MEMORIAL
இது, தேசிய மரபுடைமைக் கழகத்தின் ஓர் அமைப்பு
National Heritage Board
பங்காளர்
NATIONAL GALLERY SINGAPORE
ஆதரவுடன்
sph media
mediacorp
ஆதரவு
MCCY Ministry of Culture, Community and Youth
Better Everyday By Tote Board
இது, ஒரு முயற்சியாகும்
SG60

அச்சிடும் நேரத்தில் அனைத்து தகவல்களும் சரியானவை. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்தத் துண்டுப்பிரசுரத்தில் உள்ள தகவல்களை அதனை வெளியிட்ட தேசிய மரபுடைமைக் கழகத்தின் அனுமதியின்றி பகுதியாகவோ அல்லது முழுமையாகவோ வெளியிடக் கூடாது. 2025 தேசிய மரபுடைமைக் கழகம்.